**01.10.2024**

**C.C. No. 117/2023**

**ம.சா. 1 நிர்மலா**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**1) எதிரியுடன் இந்த வழக்கு தவிர வேறு வரவு செலவு உள்ளதா என்றால் உள்ளது. அதற்கு மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முதல் மாத வட்டி தொகையை எடுத்துக்கொண்டு கொடுத்தேன் என்றால் சரிதான். எந்த தேதியில் வட்டி எடுத்துக்கொண்டேன் என்பது பற்றி வழக்கில் சொல்லவில்லை. என்றால் சரிதான். எதிரி எந்தெந்த தேதியில் கடன் கேட்ட விபரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10 நாட்களுக்கு முன்பு கேட்டார். தேதி நினைவில்லை. பணத்தை எந்த வகை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் நினைவில்லை. எதிரி எதற்காக பணம் கேட்டார் என்றால் அவரது மனைவி தொழில் தொடங்குவதற்காக கேட்டார். எந்த தொழில் தொடங்குவதற்காக கேட்டார் என்றால் பொன் நகரில் மைக்ரோ பைனான்ஸ் தொடங்கினார்கள். அதற்காக கேட்டார்கள். எதிரியின் மனைவி தொழில் தொடங்கிய அலுவலக முகவரி தெரியுமா என்றால் தெரியாது.**

**2) எதிரியின் மனைவி தொழில் சம்பந்தமான நிறுவனம் பதிவு எதுவும் பெற்றதா என்றால் தெரியாது. எதிரியின் மனைவியை கடன் கொடுத்தற்கு முன்பு தெரியுமா என்றால் வீட்டில் பார்த்திருக்கிறேன். எதிரியின் மனைவியிடம் பேசியிருக்கிறேன். அவரிடம் பேசும்போது எதிரியின் மனைவி பெயரை சொல்லி எதிரி கடன் பெற்றிருக்கிறார் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். மேற்படி விபரத்தை பொன்நகரில் உள்ள அவரது வீட்டில் வைத்து சொன்னேன். முகவரி எனக்கு சொல்ல தெரியாது. வீட்டிற்கு சென்றிருக்கிறேன். அவரது கதவு எண், வீதி போன்ற விபரங்கள் தெரியாது. எதிரி கடன் பெற்றபோது எதிரியின் மனைவி உடன் இருந்தாரா என்றால் இல்லை. கடனுறுதிசீட்டை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றால் சரிதான். கிருஷ்ண குமார் என்பவர் பூர்த்தி செய்தார். எதிரி கையொப்பம்**

செய்தார். எதிரியின் மனைவிக்காக கடன் வாங்கியபோது எதிரியின் மனைவி வந்து கடனாளியாகவோ, சாட்சியாகவோ கையொப்பம் எதுவும் செய்தாரா என்றால் செய்யவில்லை.

3) எதிரியின் மனைவி பெயரில் புகாரோ, அறிவிப்போ கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 1 ஆவணத்தில் எதற்காக கடன் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் என் அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், என் மனைவியின் தொழில் கடன் பொறுத்தும் என்ற வாசகம் சொல்லப்பட்டுள்ளது. எதிரியின் மனைவியின் கடன் பொறுத்து என்ற விபரத்தை அறிவிப்பிலோ, வழக்கிலோ சொல்லவில்லை என்றால் மனைவிக்காகத்தான் வாங்கினார். எதிரியின் மனைவி மைக்ரோ பைனான்ஸ் வைத்திருந்த விபரம் தெரியும். தற்போது பள்ளத்தூர் கல்லூரி ஒன்றில் பணிபுரிந்து வருகிறார். முதல் மாதம் ரூ. 5 ஆயிரம் வட்டி எடுத்துக்கொண்டு கடன் கொடுத்தேன். மேற்படி விபரத்தை என் வழக்கிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 3 மாதம் வட்டி செலுத்திய விபரத்தை சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4) மா.சா.ஆ. 2 காசோலையை எதிரியே பூர்த்தி செய்து கொண்டு வந்தார். யார் பூர்த்தி செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி காசோலையில் பூர்த்தி செய்த விபரம் ஒரு மையினாலும், கையொப்பம் வேறு ஒரு மையினாலும் உள்ளது என்றால் வேறு யாரையாவது எழுத சொல்லி எதிரி கையொப்பம் செய்திருக்கலாம். வழக்கு காசோலை எந்த காரணத்திற்காக திருப்பப்ட்டது என்றால் Signature differs என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டது. திருப்பப்பட்ட பின்னர் எதிரியிடம் வேறு காசோலையையோ, பணத்தையோ திரும்ப கேட்டேனா என்றால் கேட்டேன், அவர் சரியான பதில் சொல்லவில்லை. ம.சா.ஆ. 1 ஆவணத்தில் எந்த தேதியில் வட்டி கொடுக்கவேண்டும் என்றும், எந்த தேதியில்அசல் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் 1 வருடத்தில் கொடுப்பதாக சொன்னார். என து அறிவிப்பு மற்றும் புகாரில் 1 வருட காலத்தில் பணத்தை திருப்பி தர எதிரி ஒப்புக்கொண்டதாக நானாகவே

சொல்லியிருக்கிறேன் என்றால் இல்லை. கடன் கொடுத்தபின்னர் எத்தனை முறை பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் இரண்டு, மூன்று முறை பல்கலைகழகத்திற்கு சென்று நானும் என் மகனும் கேட்டோம். 2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் தேதி மற்றும் அதற்கு முன்பும் சென்று கேட்டோம். தேதி நினைவில்லை.

5) ம.சா.ஆ. 1 ஆவணத்தில் கையொப்பம் செய்த மற்ற நபர்களின் முகவரி தெரியமா என்றால் நபரை தெரியும் முகவரி தெரியாது. இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இரு வழக்குகளிலும் ஒரே சாட்சிகள் தான் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் எதற்காக என் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் என் கணவர் சொந்தமாக வீடு கான்ட்ராக்ட் தொழில் செய்வதால் மேற்படி சாட்சிகள் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்வதால் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார்கள். மேற்படி நபர்கள் எங்கள் வீட்டிற்கு தற்செயலாக வந்தபோது சாட்சியாக இருந்தனர் என்றால் சரிதான். எதிரியிடம் இக்கடன் பற்றி முழு விபரம் சொல்லி யாரையாவது சாட்சியாக அழைத்து வரும்படி சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி சேகர் என்பவரை எதிரிக்கு நன்கு தெரியும் என்பதால் எதிரி எந்த மறுப்பும் சொல்லவில்லை. எதிரிக்கு சாட்சிகள் யாரையும் தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 1 அவணத்தில் கையொப்பம் செய்த யாரும் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) எதிரியை எப்போதும் இருசக்கர வாகனத்தில் அழைத்து வரும் பழனியப்பன் என்பவரை நான் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியும் மேற்படி பழனியப்பனை சாட்சியாக கையொப்பம் செய்ய சொல்லவில்லை. என் கணவர் 11.05.2022 ல் இறந்தார். நான் தெக்கூரில் எஸ்.வி.கே. மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். நான் அரசு ஊதியம் பெறும் அரசு ஊழியர் என்றால் சரிதான். அரசு ஊழியர்கள் வட்டி தொழில் செய்வது சட்டப்படி தவறு என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன். எதிரி என் கணவருக்கு 10 ஆண்டுகளாக பழக்கம் எதிரி எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார் அதன் மூலம் தெரியும். குறிப்பிட்ட தொகைக்கு மேல் ஒரு அரசு ஊழியர் மேல்அதிகாரியின் அனுமதி இன்றி கடன் பெறுவது தவறு

என்று தெரியுமா என்றால் தெரியாது. கடன் தொகை கொடுத்தற்கு நான் மேல்அதிகாரியிடம் நான் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கடன் கொடுத்த நானும், கடன் பெற்ற எதிரியும் அரசு ஊழியர்கள் என்பதால் இவ்வழக்கு கடன் சட்டவிரோதமானது என்றால் சரியல்ல. குறிப்பிட்ட தேதியில் எவ்வளவு பணம் பெற்றார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். 16.07.2021 மற்றும் 26.07.2021ல் மொத்தம் ரூ. 5 லட்சம் கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது. மேற்சொன்ன தேதிகளில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். அதில் உள்ள விபரம் யார் சொன்னது என்றால் நான் சொன்னதுதான். நான் முதன் முதலில் பணம் கொடுத்தபோது எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான்.

7) ம.சா.ஆ. 1 ஆவணத்தில் கையொப்பம் செய்த சாட்சிகள் அனைவரும் 4 நாட்களும் என் வீட்டில் இருந்ததாக சொல்வது பொய் என்றாலும், ஒரே நாளில் கையொப்பம் பெற்று விட்டு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் கையொப்பம் செய்த விபரம் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி பெயர் பானுப்ரியா, அவரை கடந்த 7, 8 ஆண்டுகளாக தெரியும். மொத்தமாக எதிரியிடம் நான் 4 தவணைகளில் கடன் கொடுத்தேன் என்றாலும் ஆனால் கடனுறுதி சீட்டு 2 மட்டும் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஏன் 2 கடனுறுதி சீட்டு வாங்கினேன் என்றால் முதல் கடனின் போது ரூ. 5 லட்சம் கேட்டதற்கு ஒரு கடனுறுதிசீட்டும் 2வது கடனிற்கு ஒரு கடனுறுதிசீட்டும் வாங்கினேன். மேற்படி கடன்களுக்காக 2 காசோலைகளை பெற்றேன் என்றால் சரிதான். அவர்தான் கொடுத்தார். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். அதில் இவ்வழக்கு தொகை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. நண்பர்களுக்கு கொடுப்பதை அதில் காட்ட முடியாது.

8) கைமாற்று கடனாக கொடுத்தால் வருமான வரியில் காட்ட வேண்டியதில்லை என்றாலும் வட்டிக்கு கொடுத்தால் வருமான வரியில் கணக்கு காட்டவேண்டும் என்றால் சரிதான். நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. எதிரியாகவே ஒரு வட்டி

தருவதாக சொன்னார் தற்போது நான் வட்டியே கேட்கவில்லை. இந்த இரு வழக்குகளிலும் சேர்த்து ரூ. 20 ஆயிரம் வட்டி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல ரூ. 15 ஆயிரம் வாங்கியுள்ளேன். எதிரிக்கு 90 % கண் தெரியாது என்றாலும் அதனால் அவரால் ஆவணங்களை படிக்கவோ, எழுதவோ தெரியாது என்றால் எதிரிக்கு கண்ணில் லேசான பிரச்சனைதான் உள்ளது. 90 % கண் தெரியாது என்பது சரியல்ல. எதிரிக்கு கண் தெரியாது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறார் என்றால் ஆட்சேபணை இல்லை. எதிரி முதன் முதலில் என் கணவரிடம் போன் மூலம் கடன் கேட்டார். பின்னர் நான் வீட்டில் இருந்தபோது என் வீட்டிற்கு வந்து பணம் கேட்டார். எனது வங்கி கணக்கில் இருந்துதான் பணத்தை எடுத்துக்கொடுத்தேன். நான் கடன் கொடுத்த விபரம் அனைத்தும் என் கணவருக்கு தெரியும் என்றால் சரிதான்.

9) என் கணவர் எந்த ஆவணத்திலும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கும் எதிரிக்கும் பல வரவு செலவு இருந்தது என்றால் இல்லை. எதிரியின் உதவியாளராக இருந்த பழனியப்பன் என்பவர் மீது எதிரியின் காசோலைகளை எடுத்துக்சென்று விட்டார் என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் கணவரிடம் பெற்ற கடனிற்காக கொடுத்த காசோலைகளையோ, அல்லது பழனியப்பன் எதிரியிடமிருந்து எடுத்து சென்ற காசோலைகளையோ வைத்து எதிரியிடம் பணம் பறிப்பதற்கு இவ்வழக்கு தாக்கல் செய்துளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 1 ஆவணத்தில் 26.07.2021ம் தேதி ரூ. 5 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி தேதியில் முழு தொகையான ரூ. 5 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

10) 16.07.2021ல் கொடுத்த பாதி தொகையும், 26.07.2021ல் பாதி தொகையுமாக மொத்தம் ரூ. 5 லட்சத்திற்கு மா.சா.ஆ. 1 கடனுறுதிசீட்டு எழுதப்பட்டது. மேற்சொன்ன வாசகங்கள் ம.சா.ஆ. 1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதனால் ம.சா.ஆ. 1 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தவறான வழியில் கிடைத்த காசோலையை வைத்து பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு

**90% கண் தெரியாது என்ற விபரம் தெரிந்தும் பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வருமான வரி கணக்கில் எதிரிக்கு கொடுத்த பணத்திற்கு கணக்கு காண்பிக்கவில்லை என்பதால் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் நண்பர்களுக்கு கொடுத்த பணத்திற்கு வருமான வரி காட்டவேண்டியதில்லை.**

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)

**விரைவு நீதிபதி காரைக்குடி**